முருகப்பெருமான் துணை

**மகான் பிங்களமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.05.2022**, புதன்கிழமை

1. அகிலம் காக்கும் அவசியமாக
அவதாரம் புரிந்த அரங்கனே
மகிழ மக்கள் பண்புபெற
மண்ணுலகில் சர்வபாதுகாப்பும் பெற
2. காப்புத்தர வந்த ஞானியே
கருணைபட உன் பெருமை கூறி
ஒப்புக்கொண்டு அருளாசி தன்னை
ஓதிடுவேன் பிங்களமுனிவர் யானும்
3. யானும் சுபகிருது விடை திங்கள்
உயர்வான சதுர்திகதி புந்தி வாரம்
**(**சுபகிருது வருடம் வைகாசி மாதம் **04** ம் நாள், **18.05.2022** புதன்கிழமை**)**
ஞானலோகம் ஆக உரைப்பேன்
ஞானவழி மக்களெல்லாம் வரும் வண்ணம்
4. வண்ணமுடன் தரும சாலை அமைத்து
வருபவர்க்கு தரும பலத்தின் பலன்
எண்ணம் தனில் அடையச் செய்து
என்றும் தயவுமாறா வாழ அருளும்
5. அருளும் ஞான குருஅரங்கன்
அவதாரம் தனை அறிந்தாலே
பேருலகில் மாற்றம் நடக்கும்
பெருமை மிக்க தருமம் வளர்ந்து
6. வளர்ந்து மாற்றம் தேற்றமும்
வரும் மக்கள் அனைவருக்கும்
தளர்வின்றி நடந்தேறக் கூடும்
தான தரும சக்திநிலை கூடிவர
7. வருகவே மேலவர்கள் ஆசி
வரமாக வலியக் கிட்டியே
வருமுலகில் ஞான பலம் காணும்
வல்லமை கூடி நிலை உயரவே
8. உயரவே பின்னடைவு ஏதுமிலா
உண்மை உழைப்பு உறுதியென
தயவோடு சகல வகைதனிலும்
தரணியோர்க்கு மாற்றம் கண்டு
9. கண்டு ஞானவான்கள் ஆக
கண்டுரைப்பேன் தகுதி மேம்படும்
தொண்டுள்ளம் ஆகி இனிதே
தெய்வநிலை யாவர்க்கும் வந்தடையும்

10. அடையவே மாற்றம் கண்டு
ஆபத்து இடைகண்ட பகை வாதில்லா
சோடை தடை எதனிலும் அனுகா
சுபிட்சம் மாற்றம் வளமும் கூடி

11. கூடியே பாதுகாப்புக் குறையா
குருபரன் குருராஜன் துணையாகி
நாடெங்கிலும் ஞான வேலி அமைந்து
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி மலரும்
அருளாசி முற்றே

–சுபம்–